நிற்காது. கடல் அலைக்கு எப்படி நிற்கும் என்பது எனக்குத் தெரியவில்லை. எனவே, அதுபற்றி இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

95—

சீரமைப்பு

***61339—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி ஸ்ரீபவ ஔஷதீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான திருக்குளத்தைத் தூர் வாரிச் சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருள்மிகு ஸ்ரீபவ ஔஷதீஸ்வரர் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் குளத்தினைத் தூர் வாரிட வேண்டி, ரூ. 3 இலட்சத்து 12 ஆயிரத்திற்கு, திருக்கோயில் நிதிமூலமாக மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டு, பணிகள் தொடங்கிட, இயந்திரங்கள் குளத்தில் இறக்கப்பட்டன. ஆனால், குளத்தில் நீரூற்று அதிகமாக உள்ளதால் மணல் வாரும் இயந்திரங்கள் சேற்றில் சிக்கியதால் பணி தொடங்கப்படாமல் உள்ளது. குளத்தில் நீர் வற்றியவுடன் பணி தொடங்கப்படும். அதேநேரத்தில் சுற்றுச் சுவர் அமைக்க கோயிலில் போதிய நிதி வசதி இல்லை. திருக்கோயில் நிதி மேம்பட்டாலோ அல்லது மாவட்ட நிருவாகத்தின் நிதி கிடைக்கப்பெற்றாலோ அல்லது

உபயதாரர் நிதி கிடைக்கப்பெற்றால் மட்டுமே, சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கும் நிலை உள்ளது.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி, ஸ்ரீபவ ஔஷதீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான குளம், 4 ஏக்கர் 12 சென்ட் பரப்பளவு கொண்டது. அந்தக் கோயில் குளத்தில் திருவிழாக் காலங்களில் தெப்பத் திருவிழா நடத்தப்படுகின்றது. மேலும், அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்கள் அதனைக் கோடைக் காலங்களில் குளிப்பதற்குப் பயன்படுத்துகின்றார்கள். தற்சமயம் அந்தக் குளம் மேடிட்டு, ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால், மாண்புமிகு அமைச்சரவர்கள் குளத்தைத் தூர் வாரி, சுற்றுச் சுவர் அமைத்துத் தருவார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி திருக்கோயிலுக்குச் சொந்தமாக ஏறத்தாழ 6 குளங்கள் இருக்கின்றன. அவற்றில் மூன்று குளங்கள் நல்ல நிலையில் இருக்கின்றன. இது பெரிய குளம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல, அந்தக் குளத்தைத் தூர் வாரி, புதுப்பிப்பதில் அரசுக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், இயற்கை அதற்கு ஒத்துழைக்கவில்லை. குறிப்பாக, இந்தத் திருக்கோயிலிலிருந்து 200 மீட்டர் தூரத்தில் முள்ளியாறு ஓடுகின்றது. அந்த ஆற்றின் மட்டத்தைவிட கோயில் குளத்தின் மட்டம் தாழ்வாக இருக்கின்றது. குளத்தின் மட்டம் தாழ்வாக இருக்கின்ற காரணத்தால், நீர்ச்சுரப்பு அதிகமாக இருக்கின்ற காரணத்தால், தூர் வாருகின்ற பணி தள்ளிப் போகின்றது. இந்தப் பணியைச் செய்வதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. வெகுவிரைவிலே செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2009 ஜூலை 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு எதிரிலே கோயிலுக்குச் சொந்தமான ராம மடக் குளம் இருக்கின்றது. முள்ளியாற்றிலிருந்து அந்தக் குளத்திற்குத் தண்ணீர் வரக்கூடிய வாய்க்கால்களெல்லாம் அடைபட்டு, அங்கே வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. குளத்தில் மழைநீர் தேங்கி சுகாதாரக் கேடுகள் ஏற்படுகின்றன. மேலும், கடந்த 1999 ஆம் ஆண்டு அன்றைய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சியால், கோயிலுக்கு வருமானம் வரக்கூடிய வகையில், 21 கடைகள் மற்றும் பொதுக் கூட்ட அரங்கு கட்டுவதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது. ஆகவே அந்தப் பணியைச் செய்து தர மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப்போல, 1999 ஆம் ஆண்டு, அன்றைய அறநிலையத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு தமிழ்க்குடிமகன் அவர்கள் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்வதற்காக அங்கே சென்றார்கள். அப்போது அங்கிருந்த ஆக்கிரமிப்பாளர்களும், உள்ளூர் மக்களும் சரியான ஒத்துழைப்பைத் தரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, இப்போது நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன், சட்டமன்ற உறுப்பினராகிய நீங்கள் முயற்சி எடுத்து, உள்ளூர் மக்களுடைய ஒத்துழைப்பை நல்கினால், எந்தப் பணியையும் செய்வதற்குத் தயக்கம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.